# ‘தோண்டத் தோண்ட செய்திப் புதையல்கள் - தேடத் தேட கழக மறவர்களின் தியாக வரலாறுகள்!’

## ‘முரசொலி – சில நினைவலைகள்’ நூலில் ‘என்னுரை’ எனும் தலைப்பில் முரசொலி செல்வம் உருக்கம் !

“முரசொலி - சில நினைவலைகள்” எனும் அற்புதமானதோர் புத்தகத்தை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருந்தார், முரசொலி செல்வம் அவர்கள்! அந்த நூலினை 15.9.2021 அன்று - கழகத்தின் முப்பெரும் விழாவில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

‘முரசொலி’யில் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்த அந்நூலில் “என்னுரை” எனும் தலைப்பில் - அந்நூலின் ஆசிரியர் முரசொலி செல்வம் அவர்கள் தீட்டியிருந்த அழகிய எழுத்தோவியம் இது!

சிறிய அளவில் ஒரு சில நாட்கள் எழுதலாம் எனத் தொடங்கிய தொடர் சற்றே விரிவடைந்து நுறு நாட்கள் வரை வளர்ந்தது. திராவிட இயக்க வரலாற்றில் “முரசொலி” இதழ் ஆற்றியுள்ள பங்கினையும், அது ஏற்றுக் கொண்டுள்ள எண்ணற்ற வீரத் தழும்புகளையும் எண்ணிப் பார்த்து எழுத எழுத அது விரிவடையத் தொடங்கியது.

இந்தத் தொடரை முழுமை பெற்ற ஒன்றாகக் கருதி முழு நிறைவு கொள்ள இயலாது. முரசொலி நாளிதழாக தொடங்கிய கால கட்டத்திலிருந்து நினைவுகள் முகிழ்ந்து விரிந்தளவு தொகுக்கப்பட்டுள்ளது.

இத்தொடரை எழுதத் துவங்கியபோது தேங்கியிருக்கும் குளத்து நீரில் காற்றுபட்டு எழும் அலை போல தோன்றிய நினைவுகள் தொடரத் தொடர ஆர்ப்பரித்து எழும் ஆழ்கடல் அலையாய் உருமாறியது. தோண்டத் தோண்ட செய்திப் புதையல்கள் - தேடத் தேட கழக மறவர்



களின் தியாக வரலாறுகள் - அப்பப்பா.... எத்தனை எத்தனை நெருப்பாற்று நீச்சல்கள்! - நினைக்க நினைக்க நெஞ்சை ஒவ்வொரு நிமிடமும் கசக்கிப் பிழிந்திடும் வகையில் பாசத்தோடும் நேசத்தோடும் என்னை வளர்த்து ஆளாக்கி “இனியவன் என் செல்வம்” என எழுதி நெகிழ வைத்த என்னுயிர் ஆசான், அருமைத் தலைவர் கலைஞர் ஏட்டினை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு நித்தம் நித்தம் எனக்கு கண்டிப்போடு கூடிய பயிற்சியினை அளித்து, என்னிடம் அன்பு காட்டிய அண்ணன் முரசொலி மாறன் ஆகியோரின் பல பல நினைவுகளால் என் கண்கள் இப்போதும் பனிக்கின்றன.

இத்தொடரை எழுதத் தொடங்கியபின் தெறித்த நினைவுகளை சான்றுகளோடு தர வேண்டுமென பழைய “முரசொலி” ஏடுகளைப் புரட்டிய போது பல இனிய நினைவுகள் மட்டுமின்றி இதயத்தை கனக்க வைத்த நிகழ்வுகளும் பின்னிப் பிணைந்தன.

அன்றும், இன்றும் பல ஊடகங்களில் வரலாறுகள் திரிக்கப்பட்டு கதா நாயகனை வில்லனாகவும், வில்லனை கதாநாயகனாகவும் காட்டி வரும் வேளையில் இந்தத் தொகுப்பில் வரும் பல நிகழ்வுகள் உண்மை நிலையை உரத்த குரலில் உலகுக்கு மீண்டும் நினைவூட்டும் என நம்புகிறேன். மின்மினிப் பூச்சிக்களை ஜொலிக்கும் நட்சத்திரங்களாக இன்றும் சித்தரிக்கும் சிலர்வரலாற்றின் கருப்புப் பக்கங்களுக்கு வண்ணம் பூசியும் வண்ணப் பக்கங்களை கருப்புப் பக்கங்களாக பதிவு செய்தும் புதிய தலைமுறையினரின் உள்ளத்தில் உண்மைக்கு மாறான செய்திகளை பதித்து வருவதை இத்தொடர் ஓரளவு ஓரங்கட்டும் என எண்ணுகிறேன்.

“தொடர்”தொடங்கியதும், நித்தம் நித்தம் தொலைபேசியில் பலர் அழைத்து “இந்தக் கால கட்டத்துக்குத் தேவையான பணி - தொடருங்கள்” என ஊக்குவித்தனர். அத்தனை பேருக்கும் பேசிய போதே தனித்தனியே நன்றி தெரிவித்திருக்கிறேன். இந்தப் பட்டியல் பெரியது என்பதால் அவர்கள் பெயர்களை மீண்டும் குறிப்பிட இயலாத நிலையில், ஒட்டுமொத்தமாக இங்கே என் நன்றியை அவர்கள் அனைவருக்கும் குவிக்கிறேன்.

இத்தொடரை நான் எழுதும்போது ஒவ்வொரு நாளும் அச்சுக்குப் போகும் முன் படித்து ஆலோசனைகள் வழங்கிய திரு. கே. ராஜமாணிக்கம், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு) அவர்களுக்கும், இது நூலாக வெளிவர பெருமுயற்சி எடுத்து அந்தப் பணியில் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட தலைவர் கலைஞரின் செயலாளர், அருமை சகோதரர், திரு. கே. சண்முகநாதன் அவர்களுக்கும், ஆதாரத்திற்காக சில பழைய ஏடுகள் தேவைப்பட்ட போது அதனைத் தேடியெடுத்து தந்த கலைஞர் இல்ல உதவியாளர்கள், திரு. சு. மோகன், திரு. எம். வடிவேல், மற்றும் திரு. தமிழ்தாசன், பேராசிரியர் அன்பழகனார் நூலக உதவியாளர்கள் திரு. சுந்தரம், திரு. பத்மநாபன், முரசொலி ஆசிரியர் குழுவினருக்கும் என் இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர் வரும்போதே அன்றாடம் தொலைபேசி வாயிலாகப் பேசி வந்த, இன்றைய கழகத்தலைவர், தம்பி மு.க. ஸ்டாலின், இந்த நூலுக்கு “நெகிழ் உரை” என்று கூறுமளவிற்கு நெஞ்சை நெகிழ வைக்கும் அரியதோர் அணிந்துரை வழங்கியுள்ளார். அது போலவே என் பாசமிகு நண்பர், இன்றைய கழகப் பொதுச் செயலாளர், திரு. துரைமுருகன் அவர்கள் உருக்கமான அணிந்துரை ஒன்றை எழுதியுள்ளார். ஒருவரையொருவர் முழுமையாக முற்றிலும் உணர்ந்த நட்பு எனக்கும் அவருக்கும். அவர் இந்த நூலுக்கு எழுதியுள்ள சிறப்பு மிகு அணிந்துரை நூல் குறித்து அவர் எழுதியிருப்பதை விட, நூலாசிரியர் குறித்து எழுதியது சிறிது தூக்கலாகவே அமைந்திருந்தது. அணிந்துரைகள் வழங்கியுள்ள கழகத் தலைவர் தளபதி, பொதுச் செயலாளர் துரைமுருகன் ஆகியோருக்கு என் இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு நூலை சிறப்பாக வெளிக் கொண்டு வந்த சீதை பதிப்பகத்தாருக்கும், அட்டைப்படத்தினை அழகுற வரைந்து வழங்கிய அரசு ஆர்ட்ஸ் கோபிக்கும், பிழை திருத்தி உதவிய புலவர் வாவாசிக்கும் இதயம் கனிந்த நன்றி.

- முரசொலி செல்வம்

### மனிதநேயத்தின் அடையாளமாகத் திகழ்ந்தவர்!

## தொழில் துறையின் பெருந்தூணாக விளங்கியவர் ரத்தன் டாடா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.11–

இந்தியத் தொழில்துறையின் பெருந்தூணாகவும், பணிவு மற்றும் மனிதநேயத்தின் அடையாளமாகவும் திகழ்ந்த ரத்தன் டாடா அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

இந்தியத் தொழில்துறையின் பெருந்தூணாகவும், பணிவு மற்றும் மனிதநேயத்தின் அடையாளமாகவும் திகழ்ந்த ரத்தன் டாடா அவர்கள் மறைந்த செய்தி மிகவும் வேதனையளிக்கிறது.

அவரது தொலைநோக்குமிக்க தலைமை டாடா குழுமத்தின் வளர்ச்சியை வடிவமைத்ததோடு, அறத்துடன் கூடிய தொழில்புரிதலுக்கான அளவுகோலாகவும் உலக அளவில் விளங்கியது.

நாட்டின் வளர்ச்சியிலும், புதுமையிலும், மனிதநேயச் செயல்பாடுகளிலும் ரத்தன் டாடா அவர்கள் காட்டிய இடையறாத அர்ப்பணிப்பினால் கோடிக்கணக்கானோரின் வாழ்வில் அழியாத் தடத்தினை அவர் பதித்துச் சென்றுள்ளார்.

இந்தியா ஒரு மாபெரும் ஆளுமையை இழந்துவிட்டது. எனினும் அவரது வாழ்வும் பணியும் அடுத்த பல தலைமுறைகளுக்கு ஊக்கமளித்துக் கொண்டே இருக்கும்.

இத்துயர்மிகு தருணத்தில், ரத்தன் டாடா அவர்களது குடும்பத்தார், நண்பர்கள் மற்றும் டாடா குழுமத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி ஆசிரியர்

## திருமாவேலன் தாயார் - புலவர் படிக்கராமுவின் மனைவி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.11–

கலைஞர் தொலைக்காட்சி ஆசிரியர் திருமாவேலன் தாயார் மறைவுக்கு “கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி” வருமாறு:

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான திருமாவேலன் அவர்களின் தாயாரும் - பெரும் புலவர் படிக்கராமு அவர்களின் மனைவியுமான முத்துலக்குமி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

முத்துலக்குமி அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, பெற்றெடுத்து ஆளாக்கி வளர்த்த அன்னையை இழந்து தவிக்கும் திருமாவேலன் அவர்களுக்கும், வாழ்க்கைத் துணையைப் பிரிந்து வாடும் படிக்கராமு அவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 2025ம் ஆண்டிற்கான குரூப் 4 தேர்வு ஜூலை 13ம் தேதி நடைபெறும்!

### டி.என்.பி.எஸ்சி. அறிவிப்பு!

சென்னை. அக். 11 - குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பு அடுத்த ஆண்டு ஏப்ரல் 25ம் தேதி வெளியாகிறது. 2025ம் ஆண்டிற்கான தேர்வு திட்டத்தை டிஎன்பிஎஸ்சி தற்போது வெளியிட்டுள்ளது.

டி.என்.பி.எஸ்.சி., அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் குரூப் தேர்வுகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் காலியாக உள்ள அரசுத் துறைகளின் பொறுப்புகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படுவது வழக்கம். இந்த நிலையில், அடுத்தாண்டுக்கான தேர்வுத் திட்டம் (பிளானர்), இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, குரூப் 1 தேர்வுக்கான அறிவிப்பு அடுத்தாண்டு ஏப்ரல் 1ம் தேதி வெளியிடப்பட்டு, ஜூன் 15ம் தேதி தேர்வு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பு ஏப்., 25ம் தேதி வெளியிடப்பட்டு, ஜூலை 13ம் தேதி நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2025 ஆம் ஆண்டுக்கான தேர்வு திட்டத்தை டிஎன்பிஎஸ்சி http://tnpsc.gov.in என்ற இணையதளத்தில் வெளியிட்டுள்ள நிலையில் இந்த இணையதளத்தில் அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் மாற்றம்!

### அக். 19 அன்று நடைபெறுகிறது!

சென்னை, அக். 10 - 12.10.2024 (சனிக்கிழமை) அரசு பொது விடுமுறை என்பதால் அன்று நடைபெற வேண்டிய மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் மாற்றாக, 19.10.2024 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 -மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம், பகுதி அலுவலகம்-4-தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 -திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்,

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மின்னூரில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்டக் கழக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், தொகுதி பார்வையாளர்கள் சையத்ஹபீஸ், ஜி.ராமய்யா, வேலூர் ரமேஷ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.



தேனி வடக்கு மாவட்டம் மார்க்கையன்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டியை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்.பி. மாணவ – மாணவியர்களுக்கு வழங்கினார். உடன் சின்னமனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன் மார்க்கையன்கோட்டை பேரூர் செயலாளர் பேரூராட்சி தலைவர் ஓ.ஏ.முருகன் மற்றும் கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.